# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 137 | வெள்ளிக்கிழமை Friday | 14.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ரூ.67,452 கோடி மதிப்பிலான 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

## முதலமைச்சர் விஜய் முன்னிலையில் கையெழுத்து




ரூ.1 லட்சம் கோடி தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சென்னையில் (வியாழக்கிழமை) வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது.

தமிழகத்தில் நடந்து முடிந்த 17-வது சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று த.வெ.க. ஆட்சி அமைத்துள்ளது. கடந்த மே 10-ந் தேதி தமிழகத்தின் 12-வது முதல்-அமைச்சராக ஜோசப் விஜய் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அரசு நடைமுறையில் பல் வேறு சீர்திருத்தங்களை செய்து வரும் த.வெ.க. அரசு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. ஆட்சி பொறுப்பேற்று இன்றுடன் 96 நாட்கள் நிறைவடையும் நிலையில், வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் இன்று நடந்தது.

97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து

கிண்டியில் உள்ள ஐ.டி.சி. கிராண்ட் சோழா நட்சத்திர ஓட்டலில் நடைபெற்ற மாநாட்டிற்கு முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டில், 97 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இதன் மூலம் தமிழ்நாட்டிற்குரூ.67,452கோடி தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. 1 லட்சத்து 6 ஆயிரத்து 998 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக இருக்கின்றன. ஏற்கனவே, கடந்த 3 மாதங்களில் போடப்பட்ட தொழில் முதலீடுகளையும் சேர்த்து, த.வெ.க. அரசு பதவியேற்ற 100 நாட்களில் 104 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

ரூ.1 லட்சம் கோடி ஈர்ப்பு

தொடர்ந்து, ரூ.4,4 கோடியில் 8 புதிய திட்டங்களுக்கு முதல்-அமைச்சர் விஜய் அடிக்கல் நாட்டினார். மேலும் ரூ.2,676 கோடியில் 5 திட்டங்களைத் தொடங்கி வைத்தும், ரூ.777.74 கோடியில் புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தும், 9 நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வான 20 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கியும் சிறப்பித்தார்.

இதன் மூலம் ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 514 கோடி முதலீடுகள் ஈர்க்கப்படும். 1 லட்சத்து 21 ஆயிரத்து 788 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.

எந்தெந்த நிறுவனம் எவ்வளவு முதலீடு

* தமிழ்நாட்டில் ஹிந்துஜா குழுமம் ரூ.2,500 கோடி முதலீடு செய்கிறது. இதன்மூலம் 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

* அல்ட்ராவயோலெட் நிறுவனம்தமிழ்நாட்டில் ரூ.779 கோடி முதலீடு செய்கிறது. ல்ட்ராவயோலெட் EV ஆலை கிருஷ்ணகிரியில் அமைகிறது. இதனால் 4,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

* டெய்ம்லர் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.4,000 கோடி முதலீடு செய்கிறது. டெய்ம்லர் நிறுவனத்தின் ஆலை காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட இருக்கிறது.

* ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் ரூ.250 கோடி முதலீடு செய்கிறது* லூகாஸ் டிவிஎஸ் நிறுவனம் ரூ.2,500 கோடி முதலீடு செய்கிறது

*தமிழ்நாட்டில் ரூ.1,000 கோடி முதலீடு செய்கிறது டைட்டன்

* செயின்ட் கோபைன் நிறுவனம் ரூ.2,000 கோடி முதலீடு செய்கிறது

* ரூ.5,000 கோடி முதலீடு செய்கிறது ஜே.கே. டயர்ஸ் நிறுவனம்

* பீனிக்ஸ் கோத்தாரி நிறுவனம் ரூ.1,000 கோடி முதலீடு

சென்னையில் நடைபெற்ற வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர் மாநாடு 2026-ல் ஜெர்மனியை சேர்ந்த டைம்லர் (Daimler) நிறுவனத்துடன் மிக முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் இயங்கி வரும் தனது 400 ஏக்கர் பரப்பிலான உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி மையத்தைரூ.4,000கோடி முதலீட்டில் மேம்படுத்தவுள்ளது. இதன் மூலம் வணிக வாகனங்களின் வடிவமைப்பு, ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் உற்பத்திப் பணிகள் விரிவுபடுத்தப்படுவதோடு, 400 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட உள்ளன

திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வேலைவாய்ப்பு

சென்னையில் நடைபெற்ற வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர் மாநாடு 2026-ல், ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆவிட் குழுமம் முக்கியப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டது. அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புற உள்கட்டமைப்பு, சுற்றுலா, சுகாதாரம் மற்றும் சுரங்க உபகரண உற்பத்தித் துறைகளில் களமிறங்கும் இந்நிறுவனம், முதற்கட்டமாக ரூ.7,000 கோடி முதலீட்டில் திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் திட்டங்களை செயல்படுத்தி 12,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கவுள்ளது.

YKK ஜப்பான் நிறுவனம்

அக்னிகுல் காஸ்மோஸ் ரூ.400 கோடி முதலீடு – 1,500 பேருக்கு வேலை வாய்ப்பு

ஷைலி இன்ஜினீயரிங் ப்ளாஸ்டிக்ஸ் – ரூ.500 கோடி முதலீடு, அல்ட்ரா வெயலட் நிறுவனம் ரூ.779 கோடி முதலீடு – 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு

சூப்பர்மைக்ரே நிறுவனம் ரூ.477 கோடி முதலீடு – 150 பேருக்கு வேலை வாய்ப்பு. YKK ஜப்பான் நிறுவனம் ரூ.1,651 கோடி முதலீடு – 4,316 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகவுள்ளது.

# அதிமுக போராட்டம்; பங்கேற்க முடியாது; எஸ்.பி.வேலுமணி தரப்பு கடிதம்



அதிமுக சார்பில் வேறு மாவட்டங்களில் நடக்கும் போராட்டத்தில் பங்கேற்க முடியாது என எஸ்.பி.வேலுமணி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலில் ஏற்பட்ட தோல்வி காரணமாக, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக எஸ்.பி.வேலுமணி தரப்பு எம்.எல்.ஏ.,க்கள் பிரிந்து, சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெகவுக்கு ஆதரவு அளித்ததைத் தொடர்ந்து அதிமுகவில் இபிஎஸ் அணி, எஸ்.பி.வேலுமணி அணி என இரண்டாகப் பிரிந்தது.

பின்னர் பேச்சுவார்த்தைக்கு பிறகு இரு அணிகளும்ஒன்றாகஇணைந்தன.

இதில்சி.விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் உள்ளிட்ட முன்னாள அமைச்சர்கள் பலர் தவெகவில் இணைந்தனர். அதிமுக தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டும் என்று சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி ஆகியோர் கூறி வருகின்றனர். பழைய பொறுப்புகளை மீண்டும் வழங்க வேண்டும் என இபிஎஸ்ஸுக்கு எஸ்.பி.வேலுமணி தரப்பினர் 2 முறை கடிதம் எழுதியும் இபிஎஸ் எந்த பதிலும் தரவில்லை என கூறப்படுகிறது.

சென்னை பாலவாக்கத்தில் உள்ள சி.வி. சண்முகம் இல்லத்தில் எஸ்.பி. வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், கே.பி. அன்பழகன் உள்ளிட்டோர் நேற்று (ஆக. 12, புதன்) இரவு ஆலோசனை மேற்கொண்டனர். சுமார் 5 மணி நேரம் இந்த ஆலோசனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில், விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் மேகதாது விவகாரத்தில் த.வெ.க. அரசைக் கண்டித்து, ஆகஸ்ட் 14-ல் அதிமுக மாநில தழுவிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அதிமுக சார்பில் அறிவிக்கப்பட்டது.

திடீர் திருப்பமாக, காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசை கண்டித்து அதிமுக அறிவித்துள்ள ஆர்ப்பாட்டத்திற்கு முழு ஆதரவு வழங்குகிறோம். ஆனால் சொந்த மாவட்டத்தை விடுத்து வேறு மாவட்டத்திற்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள இயலாது. இது எங்களைபுறக்கணிக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட முடிவாக தெரிகிறது. எங்களுக்கு மாநில, மாவட்ட பொறுப்புகள் மீண்டும் வழங்கப்படும் என்ற உறுதி என்னானது? ஏற்கனவே நாங்கள் வகித்து வந்த பதவிகளை வழங்க வேண்டும் என வேலுமணி தரப்பு தெரிவித்துள்ளது.

ராமநாதபுரத்தில் நத்தம் விஸ்வநாதனும் தேனியில் வேலுமணியும் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும் என ஈபிஎஸ் அறிவித்திருந்த நிலையில் இருவரும் தலைமைக்கு கடிதம் எழுதி உள்ளது அதிமுகவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழகத்தில் 19ந் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு

ஆக.19-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழையும், நீலகிரி, தேனி மாவட்டங்களில் நாளை கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழககடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் (ஆக.14) நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன்



கூடிய கனமழை பெய்யக்கூடும்.

மேலும்,மதுரை,திண்டுக்கல், சிவகங்கை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, கோவை, திருவண்ணாமலை, கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் நாளை ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழையும்,இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். ஆக.15-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

ஆக.16, 17 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்,

சென்னை, ராணிப்பேட்டை மாவட்டங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஆக.18-ம் தேதி மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள், மதுரை, ஈரோடு, சேலம்,நாமக்கல்,அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களிலும், ஆக.19-ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் ராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (ஆக.14) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக தருமபுரியில் 7 செ.மீ, கோவை மாவட்டம் சோலையாரில் 5 செ.மீ, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் 4 செ.மீ, கோவை மாவட்டம் சின்கோனா, வால்பாறை, திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் தலா 3 செ.மீ மழை பதிவாகியுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தமிழக வெற்றிக் கழக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.மாதவன் இணை செயலாளர் பிரேம்குமார் தலைமையில் தமிழக வெற்றிக் கழக பிரமுகர் நாகர்கோவில் சமூக சேவகர் ஆர்.எஸ்.ராஜன் முன்னிலையில் காங்கிரஸ் விவசாய அணி கன்னியாகுமரி மாவட்ட தலைவர் A.முகமது சாதிக் காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்ட பொது செயலாளர் B.முகம்மது ராபி காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் A.சேக் முகம்மது காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு இராஜாங்கமங்கலம் வட்டார தலைவர் K.ஷெரிப் உட்பட பலர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

# தமிழகம் முழுவதும் 1.5 லட்சத்திற்கும் அதிகமான விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்படும்

## இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் கோவையில் பேட்டி

கோவை லைட் ஹவுஸ் பகுதியில் இந்து அன்னையர் முன்னணி சார்பில் நடைபெற்ற ஆடி மாத மஞ்சள் நீர் அபிஷேக விழாவில், இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் கலந்து கொண்டார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது..



ஆடி மாத மஞ்சள் நீர் அபிஷேகவிழாதமிழகம் முழுவதும் 600-க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்று வருவதாகவும், 600-க்கும் மேற்பட்ட இடங்களில் மஞ்சள் நீர் தீர்த்த கலச நிகழ்வுகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரம்ஜான் பண்டிகைக்கு அரசு சார்பில் அரிசி வழங்கப்படுவது போன்று, அம்மன் கோவில்களில் கூழ் ஊற்றுவதற்கும் அரசு உதவ வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருவதாகவும், தமிழக அரசு இதனை பரிசீலிக்க வேண்டும் என்றும் கூறினார்.

கடந்த ஆண்டு தமிழகம் முழுவதும் சுமார் 1.5 லட்சம் விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டதாகவும், சிறிய விநாயகர் சிலைகள் சுமார் 15 லட்சம் இடங்களில் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர், இந்த ஆண்டு அதைவிட அதிகமான சிலைகள் வைக்கப்படும் என்றார்.கோவையில்மட்டும் ஆயிரத்திற்கும்மேற்பட்ட இடங்களில் விநாயகர் சிலைகள் வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தமிழர் பண்பாடும், சனாதன இந்து மதமும் ஒன்றே என்ற தலைப்பில் இந்த ஆண்டு விநாயகர் சதிர்த்தி விழா நடைபெறும் எனக்குறிப்பிட்ட அவர், இந்த ஆண்டு ராமகோபாலன் ஜியின் 100-வது ஆண்டு விழா நடைபெற உள்ளதாகவும் தெரிவித்தார்.

அனைத்து மதத்தினருக்கும் ஒரேமாதிரியான ஆட்சி வழங்கப்படும் என தமிழக அரசு பதவியேற்கும் போது தெரிவித்து இருந்ததாகவும், அது நடைமுறையில் எவ்வாறு இருக்கும் என்பதை வரும் காலம்தான் பதில் சொல்லும் என்றும் அவர் கூறினார்.

தமிழக அரசு இந்து மதத்திற்கு நேரடியாக இடையூறு செய்யவில்லை என்றாலும், கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவாக செயல்படுவது போன்ற தோற்றம் இருப்பதாக அவர் விமர்சித்தார். அமைச்சர்கள் மற்றும் துணை முதல்வர் தங்களது கிறிஸ்தவ அடையாளத்தை பெருமையாக வெளிப்படுத்துவதாகவும், சபாநாயகர் பைபிள் படிப்பதாகவும் அவர் கூறினார்.

அதே நேரத்தில், போராட்டங்கள் உள்ளிட்ட ஜனநாயக நடவடிக்கைகளுக்கு அரசு உரிய முறையில் அனுமதி அளித்து வருவதை பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

கோவில்களில் செல்போன் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிப்பது வரவேற்கத்தக்கது என்றும், கோவில்களுக்கு வரும் பெண்கள் மற்றும் ஆண்கள் தேவையில்லாமல் செல்போன்களில் புகைப்படம் எடுப்பதை தவிர்க்க செல்போன் தடையை வரவேற்கலாம் என்றார் இந்த நிகழ்ச்சியில் மாநில அமைப்பாளர் குருகுலம் ராஜேஷ் மாநில நிர்வாக குழு உறுப்பினர் சதீஷ் இந்து அன்னையர் முன்னணி மாவட்ட தலைவர் மகேஸ்வரி மாவட்டச் செயலாளர்கள் பிரேமலதா பிரியா சத்யா கல்பனா மாவட்ட செய்தி தொடர்பாளர் தனபால் மாவட்ட செயலாளர் ஆறுச்சாமி மகேஸ்வரன் சோமசுந்தரம் மற்றும் மாவட்ட நகர ஒன்றிய அன்னையர் முன்னணி பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# சுரண்டையில் புதிய தார்சாலை அமைக்க கோரிக்கை

தென்காசி மாவட்டம் சுரண்டையில் சிவகுருநாதபுரம் பகுதியில் 2000க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து



வரும் நிலையில் தென்காசி மாவட்டத்தில் வளர்ந்து வரும் முக்கிய பகுதிகளில் ஒன்றாக சுரண்டை நகரம் விளங்கி வருகிறது இந்த பகுதியை சுற்றிலும்விவசாய நிலங்களே அதிகம் காணப்படுவதால் நகருக்குள் சென்றுவர பிரதான சாலையாக ஒரே ஒரு சாலை இருந்து வந்த நிலையில் பள்ளி வாகனங்கள் கல்லூரி செல்லும் வாகனங்கள் காய்கறி சந்தைகளுக்கு சென்று வரும் வாகனங்கள் ஆம்புலன்ஸ் வாகனங்கள் என அனைத்து வாகனங்களும் ஒரே சாலையில் பயணிக்கும் பொழுது போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் என கருதி சிவகுருநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தாமாக முன்வந்து புறவழிச்சாலை அமைக்கும் வகையில் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவிற்கான இடங்களை அதன் தற்போதைய மதிப்பான 10 கோடி மதிப்பிலான இடத்தை அரசுக்கு கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கியதாகவும் அப்போதைய அதிமுக சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கி தார் சாலையாக அமைத்துக் கொடுத்த நிலையில் கடந்த 11 ஆண்டுகளை கடந்து தற்பொழுது அந்த சாலையானது மிகவும் உருக்குலைந்து குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது.

சாலை முற்றிலும் சிதலம் அடைந்து காணப்படுவதால் வாகனங்கள் செல்லும் பொழுது புழுதி அதிகம் பறப்பதாகவும் அருகில் உள்ள குடியிருப்புகளை புழுதி சூழ்ந்து பொதுமக்களுக்கு பல்வேறு சுவாச பிரச்சனைகளை ஏற்படுத்தி வருவதாகவும் சாலை அமைக்க இடங்களை தானமாக வழங்கிய விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

சுரண்டையில் உருக்குலைந்து காணப்படும் அந்த சாலையை புதிய சாலையாக அமைத்துக்கொடுக்க வேண்டும் என பலமுறை கடையநல்லூர் யூனியன் அலுவலகத்திலும் சம்பந்தப்பட்ட குலையனேரி ஊராட்சியிலும் சிவகுருநாதபுரம் பகுதி பொதுமக்கள் சார்பில் கோரிக்கை மனு வழங்கியும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.



# ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி வெங்கடாம்பட்டி ஊராட்சி கோவிலூற்றில் நூலகர் தின விழா

ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி வெங்கடாம்பட்டி ஊராட்சி கோவிலூ ற்றில் நூலகர் தின விழா வாசகர் வட்ட விழா பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பரிசளிப்பு விழா என்னால் முடியும்நாடகத்தொடக்க விழாஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மாவட்ட நூலக அலுவலர் மேரி அவர்கள் தலைமை தாங்கினார்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர் செல்லப்பா ஓய்வு பெற்றதபால்துறை அலுவலர் சுப்ரமணியன் குமரகுருபரன் தியாகராஜன் செல்வராஜ் அரவிந்த் குமார் சண்முகவேல் ஆகியோர்கள் முன்னிலை வைத்தனர்

நூலகர் முருகவேல் பிரகாஷ் அவர்கள் வரவேற்று பேசினார்

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியும் பரிசுகள் வழங்கியும் என்னால் முடியும் என்ற சமூக சீர்திருத்த நாடகத்தை முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

நிகழ்ச்சியில் கடையம் ஒன்றிய துணை சேர்மன் மகேஷ் மாயவன் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் ஊராட்சி மன்ற தலைவர் சாருகலா முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் மேகநாதன் மாவட்ட பிரதிநிதி லட்சுமியூர் ரவி அன்பழகன் துரை பாண்டியன் கவிஞர் செல்வவேல் மாயவநாதன் கடையம் ஒன்றிய ஆத்மா சேர்மன் குணசீலன் கிளைக் கழகச் செயலாளர் ஜெயராஜ் ஓய்வு பெற்ற ஆசிரியர் இளம்பரிதி சண்முக சிங் ஆசிரியர் ராஜேந்திரன் பேராசிரியர் முருகேசன் ஆசிரியர் லாரன்ஸ் ஆசிரியர் சகாதேவன் நூலகர் சண்முகவேல் பிரகாஷ் நூலகர்கள் பழனி ஈஸ்வரன் ஓய்வு பெற்ற காவலர் வேலுச்சாமி திரவியம் ராஜா ராம் ராஜேஷ் அரவிந்த் வழக்கறிஞர் பால்ராஜ் சுந்தர் ஜெகதீசன் பொன் சிங், குமார் ராஜா கீழக்கடையம் பாக்யராஜ் அருள்பாண்டி ஏ பி என் குணா ராஜபாண்டியன் முன்னாள் ஊராட்சி உறுப்பினர் ராஜா ராமர் கஜராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

பூலாங்குளம் மாதாபட்டணம் வள்ளியம்மாள் புரம் பள்ளிகளைச் சேர்ந்த முதல் மூன்று மதிப்பெண் எடுத்த மாணவமாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தோம் புதிய புரவலர்களாக 12பேர் சேர்ந்தார்கள் அதற்குரிய கட்டணம் 12,000 மாவட்ட நூலகர் இடம் வழங்கினோம் நிகழ்ச்சியை துரை மற்றும் முருகேசன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள் முடிவில் என்னால் முடியும் என்ற நாடகத்தை தொடங்கி வைத்தோம் துரை அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள் முருகேசன் அவர்கள் நன்றி கூறினார்கள்



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலையம் சுற்றுவட்டார பகுதிகளில் காவல்துறை பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது 150க்கும் மேற்பட்ட கேமராக்கள் 24 மணி நேரமும் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் இந்த நவீன ஒருங்கிணைந்த கண்காணிப்பு மையத்தை குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

# பெரியகுளத்தில் உலக நன்மை வேண்டி ஸ்ரீ ஜி ஜி லா சித்தா பாபாஜி ஆசியுடன் சக்தி மகா யாகம்

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகில் கைலாசநாதர் கோவில் மலையடிவாரம் உள்ள ஸ்ரீ ஜிஜி ல அல் சித்தா மகா வேள்வி விழாவினை ஸ்ரீ ஜி ஜி ல அல் சித் பாபாஜி........ முன்னிலை ஸ்ரீ ரமணந்தா ஜி. சுவாமிகள் அகில பாரத தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரவை அமைப்பு தேனி மாவட்டம்

கே சிவக்குமார் செய-



பாபாஜி ஆசிகளுடன்.. அருள்மிகு ஸ்ரீ அதர்வாண காளி ஸ்ரீ மகா ரத்யங்கார் தேவி சக்தி மகா யாகப்பெருவிழா...கடந்த 11 ஆண்டுகளாக .. உலக நன்மை வேண்டி சக்தி மகா யாகமானது நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் ஆடி அமாவாசை பெருவிழாவானது 27ஆம் நாள் 12:8 :26 புதன்கிழமை மிக விமர்சையாக..

நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என பஞ்ச பூதங்களையும் குறிக்கும் பொருட்டு ஐந்து குண்டங்கள் அமைத்து மூன்று நாட்கள் காசிறப்பாக யாகம் நடைபெற்றது.இந்த அற்புத விழாக்கள் பாபுஜியின் அன்பு சீடர்களும் ஆன்மீக நண்பர்களும் கலந்து கொண்டு குரு அருள் பெற்று திருவருள் பெற்று சென்றனர்.

தலைமை விழா குழு துறவிகள் சங்கம் மற்றும் நிலையூர் ஆதீனம்.. ஸ்ரீ ல ஸ்ரீ சுப்பிரமணியானந்த குருமகாசன்னிதானம்..... சிறப்பவிருந்தினர்கள். நீதி அரசர் விக்டோரியா கௌரி சென்னை உயர் நீதிமன்றம் டாக்டர்ஜெயராஜ்செல்வி மற்றும் ஜெ. தினேஷ் ..SBM கல்வி நிறுவனம் திண்டுக்கல்..

சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈசிஆர் சரவணன் MLA. மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள். ராமகிருஷ்ணன் IPS Ret காவல்துறை கண்காணிப்பாளர்.டாக்டர் ஜே அமலா தேவி எம் டி அன்னை பேரின்பம் மருத்துவமனை திண்டுக்கல் ராதிகா ரவி இந்தியா கேம்ஸ் ஹயரிங் ஹெட் & பிரிமியம் இன்ஜினியரிங் மற்றும் WILp. விபு குமார்வீடியோகான் பைபாஸ் மாவட்ட இணைச் செயலாளர் நற்பணி செய்யும் பராமரிப்பு குழு கைலாசநாதர் கோவில் கைலாசபட்டி தென்கரை பேரூராட்சி சேர்மன் நாகராஜன் மாவட்ட அரசு வழக்கறிஞர் குணசேகரன் உத்தமபாளையம் ராம்ஜி தலைவர் இந்து எழுச்சி முன்னணி ராஜபாண்டி ஜி தேனி மாவட்ட தலைவர் பாரதிய ஜனதா கட்சி.... மற்றும் சென்னை தொழிலதிபர்ஜெயராமன் foundear. MixEstar..engineaing pvt Ltd.. .. சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சரவணன் இந்த நிகழ்ச்சியில் சிறப்பாக செய்திருந்தார் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பாக உணவு ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்ச்சிக்கு ஏராளமான பொதுமக்கள் பக்தர்கள் கலந்து கொண்டு விழா வினை சிறப்பித்தனர்.

# சங்கரன்கோவிலில் வீட்டு சிலிண்டர்களை வணிகப் பயன்பாட்டுக்கு பயன்படுத்திய 7 சிலிண்டர்கள் பறிமுதல்



சங்கரன்கோவிலில்வீட்டுசிலிண்டர்களைவணிகப் பயன்பாட்டுக்கு பயன்படுத்திய பிரபல ஸ்வீட் பேக்கரியில் இருந்து நான்கு சிலிண்டர்கள் மற்றொரு ஓட்டலில் இருந்து மூன்று சிலிண்டர்கள் உட்பட ஏழு சிலிண்டர்களை வட்டாட்சியர் பாபு தலைமையில் பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள பல்வேறு ஓட்டல் மற்றும் ஸ்வீட் பேக்கரிகளில் வீட்டு சிலிண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகமாவட்ட ஆட்சியதலைவர் ரஞ்சித் சிங்கிர்கு பல்வேறு புகார்கள் வந்துள்ளது. இது தொடர்பாக வட்டாச்சியர் பாபு தலைமையில் சங்கரன்கோவிலில் உள்ள பல்வேறு ஓட்டல்கள் மற்றும் ஸ்வீட் பேக்கரிகளில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இந்நிலையில் திருவேங்கடம் சாலையில் உள்ள பிரபலமான ஸ்வீட் பேக்கரியில் வட்டாச்சியர் பாபு தலைமையில் சோதனை செய்த போது வீட்டு சிலிண்டர்களை பயன்படுத்தி வந்தனர். இதனையடுத்து நான்கு சிலிண்டர்களை பறிமுதல் செய்தனர்.. தொடர்ந்து வடக்குரதவீதியில் சோதனை செய்த போது சுக்குகாபி மற்றும்வடைவிற்பனைசெய்துவந்தகடையில்மூன்று வீட்டு சிலிண்டர்களை பயன்படுத்தி வந்துள்ளனர். அவற்றையும் பறிமுதல் செய்தனர்..

ஏழுசிலிண்டர்களைபறிமுதல்செய்தவட்டாச்சியர் பாபு தலைமையிலான வருவாய்த்துறையினர் அத்தியவாசிய பொருட்கள் கடத்தல் தடை சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த அதிரடி சோதனையில் வருவாய் ஆய்வாளர்கள் கணேசன், அருண்குமார், முத்துக்குமார், தலையாரி செந்தில்குமார் ஆகியோர் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# முதலமைச்சர் விஜய்க்கு சமூக சேவகர் மற்றும் தவெக பிரமுகர் ஆர்.எஸ்.ராஜன் பாராட்டு



தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள்,பள்ளிகள்,கல்லூரிகள் பொது துறை நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழ் தாய் வாழ்த்துக்கு தான் முதலிடம் என்பதை உறுதி செய்து முதன் முதலில் தமிழ் தாய் வாழ்த்து தான் பாட வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவையில் தனி தீர்மானம் கொண்டுவந்துநிறைவேற்றியமாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் ச.ஜோசப் விஜய் அவர்களுக்கு பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்தார்.

# கடையநல்லூர் செங்கோட்டை இரயில் நிலையக்கோரிக்கைகள்

## தெற்கு ரயில்வே பொது மேலாளர் சுப்பாராவ்விடம் இராசேந்திரன் MLA சந்திப்பு



தெற்கு ரயில்வே பொது மேலாளர் அவர்களை சென்னையில் 12.08.2026 பிற்பகல் 3:30 மணி அளவில் தி.மு. இராசேந்திரன் MLA சந்தித்தார் பொது மக்கள் பயணிகள் நலன் கருதி, கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக் கொண்டார்.

1)கடையநல்லூர் தொகுதியில் அமைந்துள்ள கடையநல்லூர் ரயில் நிலையத்தில்

லிப்ட் வசதி இண்டிகேட்டர் மேற்கூரை நீட்டிப்பு வசதி, கூடுதல் இருக்கை மற்றும் விளக்கு வசதிகள் செய்திட ஏற்கனவே 12.06. 2026 அன்று கொடுத்த கடிதத்தை நினைவூட்டி அப்பணிகளை தொடங்கிட வலியுறுத்தினார்.

2) செங்கோட்டை ரயில் நிலையத்தை 05.06.2026 அன்று பார்வையிட்டதையும் 5 ஆவது பிளாட்பார்ம் முழுமைப்படுத்துதல் விடுபட்ட பகுதியில்


பிளாட்பார்ம் அமைத்தல் மின் விளக்குகள் சீரமைத்தல் உட்பட பயணிகள் தெரிவித்த கோரிக்கைகளையும் பட்டியலிட்டு வழங்கினார்.

3) புதிதாக இயக்கப்படும் தென்காசி சென்னை தாம்பரம்வாராந்திரரயிலைஒருஇலட்சம்மக்களுக்கு பயனளிக்கும் கடையநல்லூர் ரயில் நிலையத்தில் நின்று செல்ல உடனடியாக உத்தரவுகள் பிறப்பிக்குமாறும், அந்த ரயிலை நீட்டிக்குமாறும் வலியுறுத்தினார். 4) செங்கோட்டை திருநெல்வேலி பயணிகள் ரயில் நேரத்தை ; அதில் பயணம் செய்யும் அரசு ஊழியர்கள் இதரப் பணியாளர்கள் நலன் கருதி மாற்றியமைத்து உதவிடவும் வலியுறுத்தினார்.

தவிர, செங்கோட்டை கடையநல்லூர் பகுதி ரயில் நிலையங்களை நேரில் பார்வையிட வருமாறும், குற்றாலம், மேக்கரை நீர் வீழ்ச்சிகளில் நீராட வருமாறும் கேட்டுக் கொண்டார்.

கோரிக்கை மனுக்களை ஒவ்வொன்றாக் படித்துப் பார்த்த பொது மேலாளர் அவர்கள் தக்க முறையில் ஆவன செய்வதாக உறுதி அளித்து உள்ளார்கள்.

புதிதாகப் பொறுப்பேற்று உள்ளவர் என்கிற முறையில் பொது மேலாளருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களையும் வரவேற்பையும் தெரிவித்து மகிழ்ந்தார் சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன்




ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோடு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



*ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், க.எண்.173/4,5,6,7 அண்ணாசாலை, தவுட்டுப்பாளையம், அந்தியூர் என்ற முகவரியில் இயங்கி வரும் தி/ள்.Twin Birds sports and recreation club என்ற நிறுவனத்தின் மதுபானக்கூடம் மற்றும் விற்பனை நிலையம் (எப்.எல்.2 உரிமம் 66/2025–2026) அருள்மிகு ஸ்ரீ குருநாதர் சுவாமி திருக்கோவில் பண்டிகையினை முன்னிட்டு 12.08.2026 முதல் 16.08.2026 வரையிலான ஐந்து நாட்களுக்கு மட்டும் முழுவதுமாக மூடப்பட்டிருக்கும் என்றும், அன்றைய தினங்களில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது என்றும், மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

# ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் புறநோயாளிகளுக்கு அன்னதானம்



*ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் 'வீ த லீடர்ஸ்' அமைப்பும், சித்தோடு ஸ்ரீ கஞ்சமலை சித்தர் சன்மார்க்க சங்கமும் இணைந்து புறநோயாளிகள் மற்றும் அவர்களுடன் வந்தவர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தினர்.*

*இந்நிகழ்வில் வீ த லீடர்ஸ் அமைப்பின் உறுப்பினர் கௌசிகன் மற்றும் அவரது மகள் த.அ. சுபஸ்ரீ கலந்து கொண்டு அன்னதானம் வழங்கினர். மனிதநேயத்துடன் நடைபெற்ற இச்சேவை பொதுமக்களிடையே பாராட்டைப் பெற்றது.*

# தமிழக மீனவர்கள் 9 பேர் கைது இலங்கை கடற்படை நடவடிக்கை



*ராமேசுவரம்: தமிழக மீனவர்கள் 9 பேரை இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாக கூறி தலைமன்னார் அருகே கைது செய்துள்ளனர்.*

*ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சுமார் 500 விசைப்படகுகளில் 3,000 மீனவர்கள் (புதன்கிழமை) கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.*

*நள்ளிரவு தலைமன்னார் கடற்பகுதியில் அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த வெலிங்டன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்.*

*பின்னர் படகிலிருந்த ஆரோக்கிய ஜனதன், அந்தோணி பிச்சை, டான் போஸ்கோ, பிரபு, ஆரோக்கிய டெவின், வேலுச்சாமி, சுப்பையா, ஆரோக்கிய ஜெனிஸ்டன், ஸ்டெவின் ஆகிய 9 மீனவர்கள் கைது செய்யப்பட்டு தலைமன்னார்ல கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று மன்னார் மீன்வளத் துறையினரிடம் (வியாழக்கிழமை) இன்று காலை ஒப்படைக்கப்பட்டனர்.*

*தொடர்ந்து சிறைப்பிடிக்கப்பட்ட 9 மீனவர்கள் மீது, எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.*

*கடந்த ஒரு வார காலத்தில் அடுத்தடுத்து ராமேசுவரம் மீனவர்கள் 20 பேரை இலங்கை கடற்படை கைது செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.*

# 'மது அருந்தினால் ரூ.5,000 அபராதம்...' விழுந்தமாவடி மக்களுக்கு தினகரன் பாராட்டு





*சென்னை: "நாகப்பட்டினம் மாவட்டத்தில் மதுவுக்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள மக்கள் இயக்கம் தமிழகம் முழுவதும் பரவ வேண்டும்" என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி அருகே விழுந்தமாவடி பஞ்சாயத்தில் திருமணமாகாத இளைஞர்கள் மது அருந்த முற்றிலும் தடை விதிக்கப்பட்டிருப்பதோடு, மீறி மது அருந்தினால் ரூ.5 ஆயிரம் அபராதமும், அது குறித்து தகவல் தெரிவிப்போருக்கு ரூ.2 ஆயிரம் சன்மானமும் வழங்கப்படும் என ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வெளியிட்டிருக்கும் அறிவிப்பு மிகுந்த வரவேற்புக்குரியது.*

*நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு விளைவிக்கும் 'மதுவை ஒழிப்போம் – மக்களைக் காப்போம்' என்ற முழக்கத்துடன், இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், குடும்ப ங்களின் நலனை உறுதி செய்யவும், மக்களின் பொது அமைதியைப் பேணவும் விழுந்தமாவடி பஞ்சாயத்து மக்கள் தாமாக முன்வந்து தொடங்கியுள்ள இந்த மதுவுக்கு எதிரான பிரசாரம் பாராட்டு க்குரியது. விழுந்தமாவடியில் தொடங்கியுள்ள இந்த மக்கள் இயக்கம் தமிழகம் முழுவதும் பரவி, மதுவுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, இளைய தலைமுறையினரைப் பாதுகாக்கும் வலிமையான சமூக இயக்கமாகவும் உருவெடுக்கட்டும்" என்று டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.*

# அனைத்து குவாரிகளையும் அரசே நடத்தக் கோரிய வழக்கு: தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



*மதுரை: தமிழகத்தில் அனைத்து குவாரிகளையும் அரசு நடத்தக்கோரிய வழக்கில் மாநில அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஹோமர்லால் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "தமிழகத்தில் உள்ள அனைத்து குவாரி நடவடிக்கைகளையும் அரசு ஏற்று நடத்த வேண்டும். அவற்றை கண்காணிக்க உரிய அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.*

*மேலும், குவாரிகளில் இருந்து கிடைக்கும் கனிமங்களை பொதுமக்களுக்கு உரிய விலையில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு கனிமங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். கடந்த ஜூன் 16-ஆம் தேதி அளித்த தனது மனுவை பரிசீலித்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.*

*இந்த வழக்கு நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது நீதிபதிகள், இந்த பிரச்சினை மிகவும் முக்கியமானது. மத்திய அரசு சட்டத்தில் திருத்தம் செய்துள்ளது எனக் கூறி தமிழக அரசின் இயற்கை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கை செப்.6 ம் தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டனர்.*







# சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் பயங்கர வெடி விபத்து: 3 பேர் உயிரிழப்பு



சிவகாசி அருகே நமஸ்கரித்தான்பட்டியில் செயல்பட்டு வரும் கிருஷ்ணா பட்டாசு ஆலையில் ஏற்பட்ட திடீர் வெடி விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

பட்டாசு ஆலையில் தொழிலாளர்கள் வழக்கம் போல பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. வெடிச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. விபத்தில் சிக்கிய 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் மீட்கப்பட்டு, உடனடியாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

தீயை அணைக்கும் பணி தீவிரம்

வெடி விபத்தைத் தொடர்ந்து பட்டாசு ஆலை தீப்பற்றி எரிந்த நிலையில், தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வெடிவிபத்து ஏற்பட்ட ஆலையின் உள்ளே மேலும் யாரேனும் சிக்கியுள்ளார்களா என்பது குறித்து தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். இதனிடையே விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# நடப்பாண்டின் முழு சூரிய கிரகணம்: வானியல் நிகழ்வின் அற்புத காட்சியை கண்டுகளித்த மக்கள்

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நிலவு நேர்கோட்டில் வரும்போது, சூரியனின் ஒளி முழுமையாக மறைக்கப்படும். இதனால் பகல் நேரத்திலேயே வானம் இருண்டு, மாலை நேரம் போன்ற சூழல் உருவாகும். முழு சூரிய கிரகணத்தின் போது, சூரியனின் வெளிப்புற வளிமண்டலமான 'கரோனா' மட்டும் பிரகாசமான வெண்வட்டம் போல் காட்சியளிக்கும். இந்த அரிய காட்சியே முழு சூரிய கிரகணத்தின் சிறப்பம்சமாகும்.

விண்ணில் நிகழும் வியப்பூட்டும் வானியல் நிகழ்வுகளில் ஒன்றான முழு சூரிய கிரகணம், நேற்று நிகழ்ந்தது.. இந்த அரிய நிகழ்வை உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் கண்டு ரசித்தனர். ரஷ்யாவில் உள்ளூர் நேரப்படி மாலை 5 மணிக்கு சந்திரன் முதன்முதலில் சூரியனை மறைத்தது. அப்போது அதன் வெளிப்புற ஒளிவட்டத்தின் மினுமினுப்பான ஒளி மட்டுமே எஞ்சியிருந்தது.

அதன்பின் ஐஸ்லாந்தின் தலைநகரான ரெய்க்ஜாவிக் நகரில் நிகழ்ந்த முழு சூரிய கிரகணத்தை வானியல் ஆர்வலர்கள், சுற்றுலாப் பயணிகள் உட்பட 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்டு களித்தனர்.

ஐரோப்பிய நாடுகளில் சூரியன் மறையும் நேரத்தில் கிரகணம் நிகழ்ந்ததால் கிரகணத்துடன் கூடிய சூரிய அஸ்தமனத்தை காணும் அரிய வாய்ப்பு கிடைத்தது. குறிப்பாக ஸ்பெயினில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்த முழு சூரிய கிரகணத்தைக் கண்டு மக்கள் ஆர்ப்பரித்தனர்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நாடாளுமன்ற வளாகம் உள்ளிட்ட இடங்களில் மக்கள் சூரிய கிரகணத்தை கண்டு களித்தனர். பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தை பகுதி சூரிய கிரகணம் கடந்து சென்றதை மக்கள் ஆர்வமுடன் பார்த்து ரசித்தனர். ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகள், வடமேற்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகள், கனடாவின் பெரும் பகுதி மற்றும் வட அமெரிக்காவின் சில இடங்களில் பகுதி சூரிய கிரகணம் நிகழ்ந்தது. இந்திய நேரப்படி இரவு 11.16 மணிக்கு சூரிய கிரகணம் நடைபெற்றதால், இந்தியாவில் இருந்து இதனை காண முடியவில்லை.

# தூத்துக்குடி: வாலிபர் கொலை வழக்கு குற்றவாளிகள் 5 பேருக்கு ஆயுள் தண்டனை



தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி காவல் நிலைய கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 5 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை விதித்து ADJ- II நீதிமன்றம் தீர்ப்பளித்து ள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2019-ம் ஆண்டு ஆழ்வார்திருநகரி நவலெட்சுமிபுரத்தை சேர்ந்த மாரிமுத்து (வயது 33) என்ற வாலிபரை முன்விரோதம் காரணமாக கொலை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களான, அதே பகுதியைச் சேர்ந்த மரியசிலுவை என்பரவது மகன்களான அருள்ராஜ் (31), ஞானசேகர்(29) மற்றும் சந்தியப்பன் மகன் அந்தோணிராஜ்(30), குணசிங்(26), அந்தோணிமுத்து மகன் சந்தியப்பன்(50) ஆகிய 5 பேரையும் ஆழ்வார்திருநகரி காவல் நிலைய போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி ADJ- II நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், மேற்சொன்ன நீதிமன்றத்தின் நீதிபதி ப்ரீத்தா மேற்சொன்ன நபர்களான அருள்ராஜ், அந்தோணிராஜ், ஞானசேகர், குணசிங் மற்றும் சந்தியப்பன் ஆகிய 5 பேரையும் குற்றவாளிகள் என உறுதி செய்து அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

# 'இனி வேறு பாதையில்...' அ.தி.மு.க.வில் இருந்து திரு நங்கை அப்சரா விலகல்



சென்னை:

அதிமுகவில் இருந்து விலகுவதாக கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு, திருநங்கை அப்சரா கடிதம் எழுதியுள்ளார். அதில், 'எனது அரசியல் பயணம் இனி வேறு ஒரு பாதையில் செல்லலாம்' என்று அவர் குறிப்பிட்டு ள்ளார்.


சமீபகாலமாக அதிமுகவில் இருந்து எம்எல்ஏ.க்கள் மற்றும் நிர்வாகிகள் தொடர்ந்து வெளியேறி வரும் நிலையில், தற்போது அப்சராவும் கட்சியில் இருந்து விலகுவதாக பழனிசாமிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடிதத்தில், 'மனதில் கனத்த உணர்வுடன் அதிமுகவில் இருந்து எனது விலகலை தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீது கொண்டிருந்த ஆழ்ந்த மரியாதையும், அன்பும், அரசியல் சிந்தனைகள் மீதான நம்பிக்கையும் இந்த இயக்கத்துடன் என்னை இணைத்தது.

எனது அரசியல் பயணத்தில் எனக்கு நீங்கள் வழங்கிய அன்பு, மரியாதை, நம்பிக்கை மாறும் வாய்ப்புகளுக்காக என்னுடைய மனமார்ந்த நன்றி. அதிமுகவில் இருந்து விலகுவது என்பது மனக்கசப்பு அல்லது தனிப்பட்ட வருத்தத்தால் எடுக்கப்பட்டது அல்ல.

எனது வாழ்க்கையின் முக்கிய அங்கமாக அதிமுகவில் இருந்த காலம் இருக்கும். எனது அரசியல் பயணம் இனி வேறு ஒருபாதையில் செல்லலாம். ஆனால் மக்களுக்காக பணியாற்ற வேண்டுமென்ற எனது நோக்கம் மாறாது' என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டு ள்ளது.

முன்னதாக, அதிமுகவில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் கட்சியின் செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டவர் திருநங்கை அப்சரா. ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு காங்கிரஸில் சேர்ந்து, மகளிர் காங்கிரஸ் தேசிய பொதுச்செயலாளர் ஆனார். பின்னர், மீண்டும் அதிமுகவில் சேர்ந்தார். அவருக்கு கடந்த ஜூலை மாதம் கொள்கைப்பரப்பு துணைச் செயலாளர் பதவியை பழனிசாமி வழங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'டீப் ஃபேக்' மோசடிகள் அதிகரிப்பு: பொது மக்களுக்கு சிபிஐ எச்சரிக்கை




சென்னை: 'டீப் ஃபேக்' எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பணம் பறிக்கும் மோசடி சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொது மக்களுக்கு சிபிஐ எச்சரிக்கை விடுத்துள்ளது.

வழக்கமாக சைபர் குற்றவாளிகள் ஓடிபி எண்ணைப் பெற்றே பணத்தைக் கையாடல் செய்வார்கள். அதனால் 'ஓடிபி-யை யாருடனும் பகிர வேண்டாம்' என வங்கிகளும் காவல்துறையும் தொடர்ச்சியாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றன.

ஆனால், தற்போது தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்திப் பல்வேறு புதிய வழிகளில் சைபர் மோசடிகள் அரங்கேறி வருகின்றன. அந்த வகையில், டீப் ஃபேக்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தப்படும் மோசடிகள் தற்போது தீயாய் பரவி வருகின்றன.

அந்த வகையில், சைபர் குற்றவாளிகள், நமக்குத் தெரிந்தவர்களின் குரலையோ அல்லது முகத்தையோ செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் அச்சு அசலாக உருவாக்கி, அவசர உதவி கேட்பது போல நம்ப வைத்துப் பொதுமக்களிடம் லட்சக்கணக்கில் பணத்தைப் பறித்து வருகின்றனர்.

இத்தகைய நவீன 'டீப் ஃபேக்' மோசடிகள் குறித்து பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், முன்பின் தெரியாத நபர்களிடம் இருந்து வரும் வீடியோ மற்றும் ஆடியோ அழைப்புகளை அப்படியே நம்பிப் பணத்தை இழந்துவிட வேண்டாம் என்றும் மத்திய புலனாய்வு முகமை (சிபிஐ) எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக சிபிஐ-யின் எக்ஸ் தள பதிவில், 'செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் ஒருவரின் முகம், குரல் மற்றும் உடல் அசைவுகளை அப்படியே நகலெடுத்து, அவர் செய்யாத ஒரு செயலைச் செய்தது போலவும், பேசாத ஒரு விஷயத்தைப் பேசியது போலவும் போலியான வீடியோக்கள், புகைப்படங்கள் அல்லது ஆடியோக்களை உருவாக்குவதே 'டீப் ஃபேக்' ஆகும்.

இவை பார்ப்பதற்கும் கேட்பதற்கும் உண்மையானவை போலவே இருக்கும். இதனை பயன்படுத்தி சைபர் குற்றவாளிகள் பொதுமக்களின் பணத்தை பறிக்கும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, அதிர்ச்சியூட்டும் அல்லது உணர்ச்சிகரமான வீடியோக்கள், புகைப்படங்கள் மற்றும் ஆடியோக்களை மற்றவர்களுக்குப் பகிரும் முன், அதன் உண்மைத் தன்மையை பொதுமக்கள் நன்கு ஆராய வேண்டும். ஒரு வீடியோ அல்லது குரல் செய்தி பார்ப்பதற்கு உண்மையாகத் தெரிவதால் மட்டுமே அதை அப்படியே நம்பிவிடாதீர்கள். வீடியோ கால் மூலமாகவோ அல்லது அவசரத் தேவை என்று குரல் வழிச் செய்தியாகவோ யாராவது பணம் கேட்டால், அவற்றை உறுதிப்படுத்தாமல் உடனடியாகப் பணத்தை அனுப்பக்கூடாது.

சந்தேகம் ஏற்பட்டால், அந்தச் செயலை உடனடியாக நிறுத்தி, உண்மைத்தன்மையைச் சரி பார்த்து, மோசடி என்று தெரிந்தால் உடனடியாக புகார் அளிக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவால் நம்ப முடியாத அளவுக்குப் போலிகளை உருவாக்க முடியும். உங்கள் விழிப்புணர்வே உங்களுக்கான முதல் பாதுகாப்பு. எதையும் நம்பும் முன் ஒருமுறைக்கு இருமுறை சரிபார்க்கவும்.

பொதுமக்கள் யாரேனும் இணையவழி மோசடியால் பாதிக்கப்பட்டால் '1930' என்ற எண்ணிலோ அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் அளிக்கலாம்' என்று அந்தப் பதிவில் கூறப்பட்டுள்ளது.

# ExPunjab deputy CM Sukhbir Singh Badal attacked with 'kirpan' outside gurdwara in Maharashtra's Nanded

Shiromani Akali Dal president and former Punjab deputy chief minister Sukhbir Singh Badal was reportedly attacked by a Nihang at Gurdwara Mata Sahib Kaur on the outskirts of Nanded, Maharashtra, on Thursday. Badal sustained an injury to his hand and was rushed to a nearby hospital for treatment.k place around 15 km from the main Gurdwara Nanded Sahib, one of the five Takhts, or temporal seats, of Sikhism. Badal was reportedly heading towards the langar hall after paying obeisance at the gurdwara when he was attacked with a kirpan. The gurdwara is controlled by a Nihang samparday and is not managed by the board that oversees the main Nanded Sahib gurdwara. Following the attack, Badal was shifted to the nearby Yashosai Hospital.

A viral video following the incident showed Badal walking inside a building with a saffron-coloured cloth wrapped around his right hand. Badal had arrived in Nanded on Wednesday with his family and a group of close associates as part of a three-day visit. He was inside the gurdwara with his wife, Harsimrat Kaur Badal, a Shiromani Akali Dal MP.



BJP spokesperson RP Singh condemned the attack, calling the incident "completely unacceptable" and saying that violence has no place in a democratic society. Maharashtra chief minister Devendra Fadnavis has ordered an inquiry into the reported attack on Shiromani Akali Dal chief and former Punjab deputy chief minister Sukhbir Singh Badal at a gurdwara in Nanded, reported news agency PTI.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.